குடிநீர்ப் பிரச்சினை குறித்து பேசியதால் ஆத்திரம்!

கேள்வி எழுப்பியவரை தாக்கிய துணை சபாநாயகர் ரவிசங்கர் பத்திரிகையாளரையும் தாக்கினார்!

வீடியோ வைரல் – துறையூர் சட்டமன்றத் தொகுதியில் பரபரப்பு!

திருச்சி, நவ.11 –

திருச்சி மாவட்டம் துறையூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரான ரவிசங்கர், தமிழக சட்டப்பேரவை துணை சபாநாயகராகவும் இருந்து வருகிறார். துறையூர் பகுதியில் நிலவும் குடிநீர் பிரச்சினை உள்ளிட்ட கோரிக்கைகளுடன் துறையூரைச் சேர்ந்த கார்த்தி என்பவரும், பத்திரிகை நிருபர் ஒருவரும் துணை சபாநாயகர் ரவிசங்கரை சந்தித்து மனு அளிக்கச் சென்றுள்ளனர். கார்த்தியையும் நிருபரையும் துணை சபாநாயகர் ரவிசங்கர் கண்மூடித்தனமாக தாக்கி உள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான வீடியோ, சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

திருச்சி மாவட்டம், துறையூர் கண்ணபிரான் காலனியைச் சேர்ந்த கார்த்திக்குமார் என்பவர், தனது பகுதியில் கடந்த ஒரு வார காலமாக குடிநீர் விநியோகம் சீராக இல்லை என்றும், குப்பைகள் அகற்றப்படாமல் தேங்கியுள்ளதாகவும் நகராட்சி நிர்வாகத்திடம் முறையிட்டுள்ளார். இருப்பினும், நகராட்சி தரப்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.



தாக்குதலுக்கு உள்ளானவர்

இது குறித்து, தனது தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு சட்டமன்ற துணை சபாநாயகருமான ரவிசங்கரை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள கார்த்திக்குமார் முயன்றதாகவும், ஆனால் அவர் அழைப்பை ஏற்கவில்லை என்றும் தெரிகிறது.

இந்நிலையில், தீபாவளி நாளான நேற்று அவசர வேலை காரணமாக மண்ணச்சநல்லூர் பகுதிக்கு வந்த கார்த்திக்குமார், அங்குள்ள துணை சபாநாயகரின் வீட்டின் அருகே அவரை சந்தித்து தன் பகுதி பிரச்சினைகள் குறித்து முறையிட்டதாக சொல்லப்படுகிறது.

அப்போது, பொதுமக்கள் மத்தியில் கார்த்திக்குமாரைத் தகாத வார்த்தைகளால் பேசிய துணை சபாநாயகர், அவரை சரமாரியாகத் தாக்கி எட்டி உதைத்து விரட்டியடித்ததாகக் கூறப்படுகிறது.

தாக்குதலுக்கு உள்ளான கார்த்திக் குமார், 'நான் தளபதிக்கு தான் வாக்களித்தேன்' இதற்காகத்தான் விஜய்க்கு வாக்களித்தோமா? என தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்யின் பெயரைப் பலமுறை உச்சரித்தும், அத்தாக்குதல் தொடர்ந்ததாகக்கூறப்படும்வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன.

இச்சம்பவத்தில் காயமடைந்த கார்த்திக்குமார், தற்போது மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

இந்நிலையில், மருத்துவமனையில் இருந்தபடியே ஒரு வீடியோவை வெளியிட்ட கார்த்திக்குமார், "எனது மரணத்திற்கு துணை சபாநாயகர் மற்றும் அவரது குடும்பத்தினர் மட்டுமே காரணம்" என்று பேசியிருந்தார்.

குறைகளை தெரிவிக்க வந்த சொந்த தொகுதி மக்களிடம், அரசு பொறுப்பில் உள்ள ஒரு துணை சபாநாயகர் இது போன்று அடாவடியில் ஈடுபட்டுத் தாக்குதல் நடத்திய சம்பவம் திருச்சி பகுதியில் பெரும் பரபரப்பையும் பொதுமக்கள் மத்தியில் அதிருப்தியையும் ஏற்படுத்தியது.

---

24 மணிநேரத்தில் 15க்கும் மேற்பட்ட கொலைகள்:

முதலமைச்சர் விஜய் தமிழ்நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்யட்டும்!

தயாநிதி மாறன் எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, நவ.11 –

கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலருமான தயாநிதி மாறன் எம்.பி.யின் வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழக வெற்றிக் கழக ஆட்சியின் தலை தீபாவளி பரிசு இதுதானா?

24 மணி நேரத்தில் 15க்கும் மேற்பட்ட கொலைகள்! கொல்லப்பட்டவர்களில் காவல்துறை அதிகாரியும் ஒருவர்!



தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துவிட்டது. பொதுமக்களுக்கும் பாதுகாப்பு இல்லை, தடுக்கச்சென்ற காவல் துறையினருக்கும் பாதுகாப்பு இல்லை!

முதலமைச்சராகப் பொறுப் பேற்றிருக்கும் விஜய், முதலில் மாநிலத்தின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்.

சினிமா வசனங்களும், விளம் பரப் பிம்பங்களும் மக்களின் உயிரைக் காப்பாற்றாது!

இவ்வாறு அவர் பதிவிட்டுள் ளார்.

பெண் கலெக்டருக்கு ஆபாச குறுஞ்செய்தி அனுப்பிய

கள்ளக்குறிச்சி த.வெ.க. எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ்!

சென்னை, நவ.11 -

கள்ளக்குறிச்சி த.வெ.க. எம்எல்ஏ அருள் விக்னேஷ், பெண் அரசு உயர் அதிகாரிக்கு தொடர்ந்து ஆபாச குறுஞ் செய்தி அனுப்பி தொல்லைக் கொடுத்த விவகார செய்தி சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

கடந்த 5 மாதங்களில் த.வெ.க ஆட்சியில் கொலை கொள்ளை குற்றங்கள், பாலியல் வன்கொடுமை, சிறுமிகள் மாயம் என தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு மக்கள் அச்சத்தின் மத்தியில் வாழும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும், பல்வேறு குற்றங்களில் த.வெ.க. கட்சியை சேர்ந்த பிரமுகர்களே ஈடுபட்டு வருவதும் அடுத்தடுத்து அம்பலமாகி வருகிறது. இந்த நிலையில், கள்ளக்குறிச்சி த.வெ.க. எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ், பெண் அரசு உயர் அதிகாரி ஒருவருக்கு தொடர்ந்து ஆபாச குறுஞ் செய்தி அனுப்பி தொல்லைக் கொடுத்த செய்தி, சமூகவலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது. அந்தக் குறுஞ்செய்திகளை அப் பெண் உயரதிகாரி தனது கணவருக்கு அனுப்பிய நிலையில், அதனை அவர் தலைமை இடத்துக்கு புகாராக அளித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பண்ருட்டி மணி

நவம்பர் 11 (1999)



பண்ருட்டி நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த மொழிப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 21 முறை சிறை சென்றவர்.

மிசாவில் கைதாகி சென்னை மத்திய சிறையில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

"நிமிர்ந்து நின்றால் வேங்கைப்புலி! சிரித்தால் ஒரு செழிப்பு! பேசினால் ஒரு நேசம், பாசம்! அந்த உருவம் என் கண்ணைவிட்டு என்றும் மறையாது" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

முன்னாள் எம்.பி, எஸ்.அக்னிராஜின் மருமகள் –

பேராசிரியர் அ.செந்தில்ராஜன் மனைவி சுசித்திரா மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 11 –

முன்னாள் எம்.பி. எஸ்.அக்னிராஜின் மருமகள் – பேராசிரியர் அ.செந்தில்ராஜன் மனைவி திருமதி சுசித்திரா மறைவுக்கு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.அக்னிராஜ் அவர்களின் மருமகளும், அழகப்பா பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் அ. செந்தில்ராஜன் அவர்களின் மனைவியுமான திருமதி. சுசித்திரா அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரது மறைவு, குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து துயரத்தில் வாடும் பேராசிரியர் அ. செந்தில்ராஜன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

த.வெ.க. ஆட்சியின் நூலகத்துறை முறைகேடுகளை மூடிமறைக்க முயற்சி

நூலகத் துறை இயக்குநர் ஜெயந்தி பதவி பறிப்பு!

சென்னை,நவ.11–

த.வெ.க. ஆட்சியின் நூலகத்துறை முறைகேடுகளை மூடிமறைக்கும் முயற்சியாக நூலகத் துறை இயக்குநர் ஜெயந்தியின் பதவி பறிக்கப்பட்டுள்ளதாக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

த.வெ.க. ஆட்சிக்கு வந்த பின் கோவை பெரியார் அறிவுலகத்தில் போலி புத்தகங்கள் வைக்கப்பட்டது அண்மையில் அம்பலமானது. தவெக ஆட்சி அமைந்து 6 மாதங்கள் கடந்த பின் அம்பலமான இந்த முறைகேடுகளுக்கு முந்திய திமுக ஆட்சியின் மீது பழிபோடும் முயற்சிகளை த.வெ.க. அமைச்சர்கள் மேற்கொண்டு வருகின்றனர். புத்தகங்கள் நூலகத்திற்கு வந்து சேர்ந்ததும், அவற்றுக்கான சரிபார்ப்புப் பணிகள் மற்றும் முத்திரையிடப்பட்ட தேதிகள் யாவும் தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகுதான் நடந்துள்ளன. இந்த போலிப் புத்தகங்கள் குறித்து உரிய விசாரணை நடத்தக் கோரி திமுக சார்பில் லஞ்ச ஒழிப்புத் துறையிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது குறித்து உரிய விசாரணை நடத்துவதற்கு மாறாக, மற்றவர்கள் மீது பழி போடுவதிலேயே த.வெ.க. ஆட்சியாளர்கள் குறியாக உள்ளனர். இந்நிலையில், தவெக அரசின் முறைகேடுகளை மூடிமறைக்கும் முயற்சியாக நூலகத் துறை இயக்குநர் ஜெயந்தியின் பதவி பறிக்கப்பட்டுள்ளதாகவும், முறைகேடுகளுக்கு உதவும் வகையில் புதிய இயக்குநராக சஜீவனா நியமிக்கப்பட்டுள்ள தாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மணப்பாறை கா.அன்பழகன்

நவம்பர் 11 (2018)



கழகம் துவக்கப்பட்ட போதே, தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

முதன்முதலாக மணப்பாறையில் கிளைக் கழகத்தை துவக்கி, அக்கிளைச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்தவர்.

1964ல் குளித்தலையில் நடைபெற்ற சட்ட நகல் எரிப்பு போராட்டத்தில் அன்பிலார், பரமத்தி சண்முகம், குளித்தலை முத்துகிருஷ்ணன் போன்ற கழக முன்னோடிகளுடன் கலந்து கொண்டு கைது செய்யப்பட்டு, மூன்று மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்தவர். அதுமட்டுமல்லாமல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.